**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**அசல் வழக்கு எண். 74/2022**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் நாள் செவ்வாய்கிழமை**

வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு. எஸ்.முத்துராமன்,பி.எல்.,சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**PW- 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | அன்பழகன் | த/பெ.: | பாலசுப்ரமணியன் |
| கிராமம்: | மன்னை நகர் | தாலுக்கா: | மன்னார்குடி |
| மதம்: | | தொழில்: | |
| வயது: | 66 | முகவரி: | 7 – இராமானுஜம் தெரு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of **24.03.2026.**

**முதல் விசாரணை :-**

நான் வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு சாட்சி 1 ஆவேன். நான் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் கடந்த 12.03.2026 ம் தேதியன்று விசாரணை செய்யப்பட்டிருந்தேன். என் தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி வாய்தா ஒத்தி வைக்கப்பட்டதன் பேரில் பின்வரும் ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 26.07.2012 | வாதியின் மனைவி கங்காதேவி பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணம் | அசல் |
| வா.சா.ஆ.2 | 09.03.2022 | வாதி மனைவி கங்காதேவி பெயரில் உள்ள பட்டா | அசல் |
| வா.சா.ஆ.3 | 17.03.2022 | வாதி பெயரில் ஏற்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் | அசல் |
| வா.சா.ஆ.4 | 19.06.2022 | வாதி மனைவி பெயரில் உள்ள மனை ஒப்படை உத்தரவு வரைபடத்துடன் | அசல் |
| வா.சா.ஆ.5 | 24.02.2022 | கூத்தாநல்லூர் காவல்நிலையத்தில் அளித்த புகார் மனு | அசல் |
| வா.சா.ஆ.6 | 26.06.2022 | கூத்தாநல்லூர் காவல்நிலையத்தில் இரண்டாம் முறை அளித்த புகார் மனு | அசல் |
| வா.சா.ஆ.7 | 29.06.2022 | மேற்படி புகார் மனு நகலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பெற்று கொண்ட பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டை | அசல் |
| வா.சா.ஆ.8 | 29.06.2022 | திருவாரூர் மாவட்ட ஆட்சியர், மேற்படி புகார் மனு நகலை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் பதிவஞ்சல் அட்டை | அசல் |
| வா.சா.ஆ.9 | 29.06.2022 | மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் | அசல் |

| | | | |
|---|---|---|---|
| | | பெற்றுக்கொண்டதற்கான பதிவஞ்சல் அட்டை | |
| வா.சா.ஆ.10 | | பிரதிவாதியால் அமைக்கப்பட்ட கழிவுநீர் தொட்டி மற்றும் சேதப்படுத்தப்பட்ட வேலியை காட்டும் புகைப்படங்கள் | அசல் |
| வா.சா.ஆ.11 | | மேற்படி புகைப்படங்கள் அடங்கிய குறுந்தகடு | அசல் |
| வா.சா.ஆ.12 | | புகைப்படத்திற்கான ரசீது | அசல் |

எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசார</u>ணை - வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.**

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி
மன்னார்குடி.